சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.146/2018

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் பி.வாசா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | வயது | 54 |
| க/பெ | சுதர்சன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சார்பதிவாளர் அலுவலகம்,<br>மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | சார்பதிவாளர்,<br>மேட்டுப்பாளையம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

இந்த வழக்கில் மேட்டுப்பாளையம் சார் பதிவாளரும், ஒரு தரப்பினர் என்றால் சரி தான். ஆனால் இந்த வழக்கில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டபோதும் ஆஜர் ஆகாமல் ஒரு தலை பட்ச படுத்தப்பட்டோம் என்றால் சரி தான். 4 ம் பிரதிவாதிக்கு ஆதரவாகவே நீதி மன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரி அல்ல. வா.சா.ஆ.1 உயிலை பதிவு செய்த போது நான் மேட்டுப்பாளையம் சார் பதிவாளராக பணி புரிய வில்லை என்றால் சரி தான். அதனால் வா.சா.ஆ.1 உயிலை பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 உயில் பதிவு செய்த காலத்தில் ஆவணங்களில் எழுதி கொடுப்பவரின் புகைப்படம் ஒட்டும் வழக்கம் இல்லை என்றால் சரி தான். அந்த காலத்தில் போலி உயில் நிறைய பதிவு செய்யப்பட்டதால்

தான் ஆவணங்களை புகைப்படங்கள் ஒட்டும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு சார் பதிவாளராக இதையெல்லாம் நான் தெரிந்து வைத்து இருக்க வேண்டும் என்றும் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. பொதுவாக ஒரு ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்பவரின் பெயர், தகப்பனார் பெயர் மற்றும் முழு விலாசம் எழுதுவது வழக்கம் என்றால் சரி தான். அது போல நடைமுறை வா.சா.ஆ.1 இல்லை என்றால் சரி அல்ல. வா.சா.ஆ.1ல் 1வது சாட்சியாக கூறப்பட்டுள்ள பிரகாஷ், த/பெ பொன்னுசாமி, மேட்டுப்பாளையம் என்ற பெயரில் சுமார் 1000 பேர் இருப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த விவரங்களை சார்பதிவாளர் தான் சரி பார்த்து ஆவணம் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல. சாட்சி கையெழுத்து செய்தவர்களின் அடையாள அட்டைகள் எதுவும் வா.சா.ஆ.1 உடன் இணைக்கப்பட வில்லை என்றால் சரி தான். அதனால் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்றால் சரி அல்ல. வா.சா.ஆ.1ல் 4ம் பிரதிவாதி பாலகுமாரின் விலாசம் எதுவும் இல்லை என்றால் சரி தான். 4ம் பிரதிவாதி அவரது தகப்பனாருடன் மேட்டுப்பாளையத்திலேயே இல்லை என்றும் அதனால் தான் அவரது விலாசம் வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் சரி அல்ல. பொதுவாக ஒரு கிரைய ஆவணத்தில் கிரைய தொகை செலுத்தப்பட்டால் தான் அதனை பதிவு செய்வோம் என்றால் சரி தான். பொதுவாக உயில் ஆவணத்தில் பணம் எதுவும் செலுத்தப்பட்டதா என உயில் ஆவணம் எழுதுபவரிடம் கேட்க மாட்டோம் என்றால் உயில் எழுதி வைக்கிறீர்களா என்று மட்டும் கேட்போம். வா.சா.ஆ.1 உயில் எழுதிய

போது நான் சார் பதிவாளராக பணி புரியாததால் அப்போதைய சார் பதிவாளர் அவ்வாறு கேட்டாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான். பொதுவாக ஒரு ஆவணத்திற்கு யார் பதிவு கட்டணம் செலுத்துகிறாரோ அவரது பெயருக்கு தான் ரசீது எழுதுவோம் என்றால் சரி அல்ல. யார் எழுதி வாங்குகிறார்களோ அவர்களது பெயருக்குத் தான் ரசீது எழுதுவோம். வா.சா.ஆ.1க்கு யார் பதிவு கட்டணம் செலுத்தினார் என்ற விவரம் இல்லை என்றால் உள்ளது. என்னுடைய முதல் விசாரணையில் ராஜீ என்பவர் பணம் செலுத்தியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு கட்டண ரசீதுக்கு நகல் கொடுப்பது இல்லை என்றால் சரி அல்ல. நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் வாதி வா.சா.ஆ.1 நகல் கோரி மனு தாக்கல் செய்தபோது அவருக்கு அந்த ரசீது வழங்கப்பட வில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. நான் மேட்டுப்பாளையம் சார்பதிவாளராக பதவி ஏற்று ஒரு வருடம் ஆகிறது. வா.சா.ஆ.1 எங்கள் அலுவலகத்தில் இருந்து நான் இன்று கொண்டு வந்த ஆவணம் இல்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.1ல் உள்ள ரசீது 4ம் பிரதிவாதியால் போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. அதனால் தான் வா.சா.ஆ.1 ற்கு நகல் விண்ணப்பித்த போது வாதிக்கு அந்த நகல் கிடைக்க வில்லை என்றால் சரி அல்ல. பொதுவாக உயிலில் உயில் எழுதும் நபருக்கு எத்தனை பிள்ளைகள் என்றும் யார் அவரை பார்த்து கொண்டது என்றும் எழுதுவது வழக்கம் என்றால் சரி தான். வா.சா.ஆ.1ல் அவ்வாறு குறிப்பு இல்லை என்றால் சரி தான். அதனால் வா.சா.ஆ.1 செல்ல தக்கது அல்ல என்றால் சரி அல்ல. எந்தவித நடைமுறையையும்

கடைபிடிக்காமல் எனக்கு முந்தைய சார் பதிவாளர் வா.சா.ஆ.1 ஐ பதிவு செய்து உள்ளதால் வா.சா.ஆ.1 சட்ட படி செல்ல தக்கது அல்ல என்றால் சரி அல்ல. வாதி தான் அவரது தாயாரை கடைசி வரை பார்த்து கொண்டார் என்றும் 4 ம் பிரதிவாதி அப்போது மேட்டுப்பாளையத்திலேயே இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் 4 ம் பிரதிவாதி வா.சா.ஆ.1ல் கண்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா.கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.